# அமரர் கந்தையா மனோகரன் அவர்களது வாழ்க்கை வரலாறு

ஈழமணித் திருநாட்டின் வடபால் யாழ்ப்பாணத்தில் செழுமை மிக்க ஊரான சுதுமலையில் சைவ வேளாண்குடி மரபில் கந்தையா தெய்வானைப்பிள்ளை தம்பதியினரின் அருஞ்செல்வமாய் 1960.04.08 அன்று மனோகரன் பிறந்தார்.

1964இல் இலங்கையின் வடபகுதியை போலியோ நோய் தாக்கியது. அதன் காரணத்தினால் வலுவிழந்தவர்களில் அன்னாரும் ஒருவர்.

தன்னால் பாடசாலைக் கல்வியை தொடமுடியாது போனாலும் அன்று சிறந்த வருவாய் ஈட்டித் தந்த தொழில் துறையான சுருட்டுத் தொழிலில் 11 வயதிலேயே தன்னை ஈடுபடுத்திக் கொண்டார்.

இக்கால உலகியலுக்கு கல்வியறிவு அத்தியாவசியம் என்பதை உணர்ந்து தனியார் கல்வி மூலம் பயின்று 1979ஆம் ஆண்டு க.பொ.த சாதாரண தரப் பரீட்சையிலும் தேற்றினார்.

அன்னார் தனது இல்லற வாழ்வினை அமைக்கும் பொருட்டு தொல்புரத்தைச் சேர்ந்த கந்தையா இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் மகளான பரமேஸ்வரியை 1990ஆம் ஆண்டில் துணைவியாக்கிக் கொண்டார்.

இவர்களின் இல்லறப் பயனாக தனஞ்சயன், தர்ஷாயினி எனும் இரு மகவுகளைப் பெற்றுப் பூரித்தனர்.

1995ஆம் ஆண்டில் மலேரியா நோயின் தாக்கத்தால் தர்ஷாயினியை இழந்தனர்.

காலம் கடக்க கண்ணீர் மறைய சீரான கல்வியை ஊட்டி தனஞ்சயனை நற்பிரஜையாய் உருவாக்கினார்.

விடாமுயற்சியுடனும், துடிதுடிப்போடும் செயற்பட்டு வந்த அன்னார் 25.02.2016 அன்று நோயின் வீரியத்தினால் இப்பூவுலக வாழ்வைத் துறந்து சிவபதமடைந்தார்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

